**1) 15–வது நிதி ஆணையத்தால் மருத்துவத் துறை மேம்பாட்டிற்காக, தமிழ்நாட்டிற்கு வரும் ஐந்து ஆண்டுகளுக்கு பரிந்துரைத்துள்ள 4,280 கோடி ரூபாய் நிதியைப் பயன்படுத்தி, வட்டார அளவிலான மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு நோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்படும். மேலும், இந்த நிலையங்கள் "அனைவருக்கும் நலவாழ்வு மையங்களாக" மேம்படுத்தப்படும்.**

15–வது நிதி ஆணையத்தால் மருத்துவத் துறை மேம்பாட்டிற்காக, தமிழ்நாட்டிற்கு வரும் ஐந்து ஆண்டுகளுக்கு பரிந்துரைத்துள்ள 4,280 கோடி ரூபாய் நிதியைப் பயன்படுத்தி, வட்டார அளவிலான மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும். மேலும், அதிக நோயாளிகள் பயன்படுத்தும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு நோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்படும். இது தவிர, இந்த நிதியின் கீழ் இந்த மையங்கள் **'அனைவருக்கும் நலவாழ்வு மையங்களாக'** மேம்படுத்தப்படும்.

**2) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற மகத்தான திட்டம் ரூபாய் 258 கோடி செலவில் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கப்படும்.**

"மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் 5.8.2021 அன்று தொடங்கப்பட்டு, ஊரகப் பகுதிகளில் 50 வட்டாரங்கள் மற்றும் மூன்று மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இத்திட்டம் 11,086 பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தில், உயர் இரத்த அழுத்தம் / நீரிழிவு போன்ற தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்ட 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மருந்துகளை அவர்கள் இல்லங்களுக்கு சென்று வழங்கிடவும், மருத்துவர், செவிலியர் மற்றும் இயன்முறை சிகிச்சையாளர் கொண்ட 497 நடமாடும் குழுக்கள், தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட வாகனம் மூலம் நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று, நோய் ஆதரவு

சேவைகள் ( Palliative Care), இயன்முறை மருத்துவ சேவைகள் ( Physiotheraphy), சிறுநீரக நோயாளிகளை பராமரித்தல் ( Peritoneal Dialysis), ஆகிய சேவைகளை மேற்கொள்ளவும், நோயாளிகளை அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்காக மருத்துவமனைகளுக்கு பரிந்துரைத்தல், குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளை கண்டறிதல் போன்ற பல்வேறு சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட இம்மகத்தான திட்டம், ரூபாய் 258 கோடி செலவில் இந்நிதி ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

**3) தமிழ்நாட்டில் முதல்முறையாக அரசு மருத்துவமனைகளில் செவிலியர் கண்காணிப்பு மையங்கள் (Central Monitoring Nursing Stations) ஏற்படுத்தி, 1,583 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ரூபாய் 266.73 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 35 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 18 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 139 அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக 1,583 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். இப்பிரிவுகளில், மல்டிபாராமானிட்டர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், சிபேப், இசிஜி கருவி, எக்ஸ்ரே கருவி, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவி, சிரிஞ் பம்ப், என்டோடிரக்கியல் கப் மானோமீட்டர் ( Endotracheal Cuff Manometer) ஆகிய கருவிகள் வழக்கப்பட்டு, இக்கருவிகளின் ஒருங்கிணைந்த தரவுகளை ( Vitals Monitoring) ஒரே இடத்திலிருந்து கணினி வாயிலாக கண்காணிக்க, தமி ழ்நாட்டிலேயே முதல்முறையாக 24 மணிநேரமும் செயல்படும் செவிலியர் கண்காணிப்பு மையம் ( Central Monitoring Nursing Station) ஏற்படுத்தப்படும். இதற்காக ரூபாய் 266.73 கோடி செலவிடப்படும்.

**4) 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 18 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் தலா ரூபாய் 2.27 கோடி வீதம் பன்முக உயர்தர தீவிர சிகிச்சை பிரிவுகள் ரூபாய் 97.49 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பிரிவுகளை மேம்படுத்தும் வகையில் இந்த ஆண்டில் 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 18 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 12 படுக்கை வசதிகள் கொண்ட **பன்முக உயர்தர தீவிர சிகிச்சைப் பிரிவுகள்** ( Hybrid ICU) தலா ரூபாய் 2.27 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். இப்பிரிவுகளில், ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய அவசர சிகிச்கை படுக்கைகள், மல்டிபாராமானிட்டர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், சிபேப், இசிஜி கருவி, எக்ஸ்ரே கருவி, எக்கோ கருவி, சிரிஞ் பம்ப், என்டோடிரக்கியல் கப் மானோமீட்டர் ( Endotracheal Cuff Manometer) போன்ற நவீன கருவிகளுடன் ரூபாய் 97.49 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**5) 8 அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 9 கோடி வீதம் ரூபாய் 72 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு தரம் உயர்த்தப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டம்–பரமக்குடி, திருப்பூர் மாவட்டம்–உடுமலைப்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம்–பழனி, கிருஷ்ணகிரி மாவட்டம்–ஓசூர், நாகப்பட்டினம் மாவட்டம்–வேதாரண்யம், கோயம்புத்தூர் மாவட்டம்–வால்பாறை, திருவாரூர் மாவட்டம்–திருத்துறைபூண்டி மற்றும் திருவள்ளூர் மாவட்டம்–பூந்தமல்லி ஆகிய எட்டு அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 9 கோடி வீதம் ரூபாய் 72 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

**6) தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 389 புதிதாக நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் 2008–ஆம் ஆண்டு தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவை வழங்கும் பொருட்டு **நடமாடும் மருத்துவக் குழு** சேவை தொடங்கப்பட்டது. நடமாடும் மருத்துவச் சேவைத் திட்டம் தொய்வின்றி சீரான முறையில் தொடர்ந்து செயல்பட புதிதாக 389 நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**7) திண்டிவனம், தாம்பரம், ஸ்ரீவில்லிபுத்தூர், கோபிசெட்டிப்பாளையம், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி ஆகிய 6 அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களுக்கு (CEmONC) தலா ரூபாய் 6.90 கோடி வீதம் புதிய கட்டடங்கள் ரூபாய் 41.4 0 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

விழுப்புரம் மாவட்டம்–திண்டிவனம், செங்கல்பட்டு மாவட்டம்–தாம்பரம், விருதுநகர் மாவட்டம்–ஸ்ரீவில்லிபுத்தூர், ஈரோடு மாவட்டம்–கோபிசெட்டிப்பாளையம், திருநெல்வேலி மாவட்டம்–அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி மாவட்டம்–தென்காசிஆகிய 6 அரசு மருத்துவமனைகளிலுள்ள ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களில் **(CEmONC)** புதிய கட்டடங்கள் தலா ரூபாய் 6.90 கோடி வீதம் ரூபாய் 41.40 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**8) ஊரகப் பகுதிகளில் உள்ள 2,400 துணை சுகாதார நிலையங்கள் 'நலவாழ்வு மையங்களாக' ரூபாய் 35.52 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 2,400 துணை சுகாதார நிலையங்கள் **'மக்களைத் தேடி மருத்துவம்'** திட்டத்திற்கு ஏதுவாக 'நலவாழ்வு மையங்களாக' ரூபாய் 35.52 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**9) மரபணு இரத்த நோய்களான தலசீமியா மற்றும் ஹீமோபிலியா சிகிச்சைக்காக மருந்துகள் மற்றும் உபகரணங்கள் 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூபாய் 34 கோடி செலவில் வழங்கப்படும்.**

மரபணு இரத்த நோய்களான தலசீமியா மற்றும் ஹீமோபிலியா சிகிச்சைக்காக தருமபுரி, சேலம், மதுரை, தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஒன்பது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு **'ஹீமோகுளோபினோபதி' தினசரி சிகிச்சை மையங்களுக்கு** மருந்து மற்றும் உபகரணங்கள் ரூபாய் 34 கோடி செலவில் வழங்கப்படும்.

**10) 57 ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களில் (CEmONC) தங்கு தடையின்றி ஆக்ஸிஜன் கிடைக்க ரூபாய் 25.8 0 கோடி மதிப்பீட்டில் திரவ மருத்துவ ஆக்ஸிஜன் கலன்கள்அமைக்கப்படும்.**

57 ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையங்களில் ( CEmONC) தங்கு தடையின்றி ஆக்ஸிஜன் கிடைக்க ஏதுவாக திரவ மருத்துவ ஆக்ஸிஜன் கலன்கள் ( LMO) மற்றும் அதற்குரிய இணைப்புக் குழாய்கள் ரூபாய் 25.8 0 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**11) தென்காசி, மயிலாடுதுறை மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 19.50 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.ஐ. (MRI) ஸ்கேன் கருவி நிறுவப்படும்.**

தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மயிலாடுதுறை மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 6.50 கோடி வீதம் ரூபாய் 19.50 கோடி மதிப்பீட்டில் மூன்று எம்.ஆர்.ஐ. (MRI) ஸ்கேன் கருவிகள் நிறுவப்படும்.

**12) கொரோனா நோய் கட்டுப்பாடு மற்றும் சிகிச்சை மேலாண்மை பணிகளை கண்காணிக்க 286 அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 18.61 கோடி செலவில் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கப்படும்.**

கொரோனா நோய் கட்டுப்பாடு மற்றும் சிகிச்சை மேலாண்மை பணிகளை மாநில அளவில் திறம்பட கண்காணித்து செயல்படுத்துவதற்காகவும், துரிதமான தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காகவும் 286 அரசு மருத்துவமனைகளுக்கு கணினி, பார்கோடு ஸ்கேன் கருவி, பார்கோடு அச்சு கருவி போன்ற தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ரூபாய் 18.61 கோடி செலவில் வழங்கப்படும்.

**13) 29 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள் தலா ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 17.4 0 கோடி செலவில் கட்டப்படும்.**

புதுக்கோட்டை மாவட்டம்–மீமிசல் மற்றும் பெருங்களூர், அரியலூர் மாவட்டம்–டி.பாலூர், கடலூர் மாவட்டம்–மங்களூர், திண்டுக்கல் மாவட்டம்–ஆலமரத்துப்பட்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம்–மணிமுத்தாறு அணை, கரூர் மாவட்டம்–உப்பிடமங்கலம், தூத்துக்குடி மாவட்டம்–பெரிலோவன்பட்டி, புதுக்கோட்டை மற்றும் ஆனந்தபுரம், மதுரை மாவட்டம்–கள்ளந்திரி, நாகப்பட்டினம் மாவட்டம்–கிளியனூர், வாய்மேடு, நாமக்கல் மாவட்டம்–நாமகிரிப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம்–நைனார்கோவில் மற்றும் உச்சிப்புளி, பெரம்பலூர் மாவட்டம்–மருவத்தூர், திருவள்ளூர் மாவட்டம்–பாரிவாக்கம், இராணிப்பேட்டை மாவட்டம்–நவ்லாக், விருதுநகர் மாவட்டம்–உப்பத்தூர், ஜமீன்கொலன்கொண்டான், பந்தல்குடி, கன்னிசேரிபுதூர், தென்காசி மாவட்டம்–மடத்துப்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்–அரசன்குடி, திருப்பத்தூர் மாவட்டம்–மாதனூர், திருவண்ணாமலை மாவட்டம்–நார்தம்பூண்டி, ஆவூர், வேலூர் மாவட்டம்–பொய்கை ஆகிய 29 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவு தலா ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 17.4 0 கோடி செலவில் அமைக்கப்படும்.

**14) 23 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பை வலுப்படுத்த தலா ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 17.25 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்**

சிவகங்கை மாவட்டம்–தேவகோட்டை, காரைக்குடி, முத்துபட்டினம், அரியலூர் மாவட்டம்–ஜெயம்கொண்டம், இராமநாதபுரம் மாவட்டம்–பாரதியார் பார்க் மற்றும் இராமநாதபுரம், மதுரை மாவட்டம்–கொடிகுளம், தென்காசி மாவட்டம்–கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், தென்காசி, வேலூர் மாவட்டம்–அலமேலுமங்காபுரம், சைதாப்பேட்டை, தாரப்படவேடு, கொணவட்டம், திருவண்ணாமலை மாவட்டம்–வந்தவாசி, ஈரோடுமாவட்டம்–சத்தியமங்கலம், நாகப்பட்டினம் மாவட்டம்–சீர்காழி, கன்னியாகுமரி மாவட்டம்–குழித்துறை மற்றும் பத்மநாபபுரம், திருச்சிராப்பள்ளி–துறையூர், தூத்துக்குடி மாவட்டம்–கோவில்பட்டி, விழுப்புரம்–திண்டிவனம் ஆகிய 23 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா ரூபாய் 75 இலட்சம் வீதம் ரூபாய் 17.25 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும். இதனால் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகள் சேவை, மகப்பேறு மருத்துவம், தொற்றா நோய்கள் சேவை மற்றும் பல்துறை சிறப்பு சேவைகள் வலுப்படுத்தப்படும்.

**15) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலனை பாதுகாக்க மக்கள் நலப் பதிவு ( Population Health Registry) என்னும் சுகாதார தகவல் இயங்குதளம் உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் நலனை பாதுகாக்க மக்கள் நலப் பதிவு ( Population Health Registry) என்னும் சுகாதார தகவல் இயங்குதளம் ( Health IT Platform) தனி மனித சுகாதார அடையாள எண்ணுடன் (Unique Health Identification Number) ஒருங்கிணைக்கப்பட்டு, சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகள், நிகழ்நேர தரவுசார் முடிவுகள் ( Data Driven Decision Making) எடுக்கப்பட்டு மாநில சுகாதார தரம் ( SDG State Health Index) மேம்படுத்தப்படும்.

**16) கிராமப்புற சுகாதார சேவையை மேம்படுத்த புதிதாக 2,400 செவிலியர்கள் மற்றும் 2,448 சுகாதார ஆய்வாளர்கள் ரூபாய் 17.42 கோடி செலவில் நியமனம் செய்யப்படுவார்கள்.**

தமிழ்நாட்டில் நலவாழ்வு மையங்களில் 2,400 துணை சுகாதார நிலையங்களுக்கு புதியதாக செவிலியர்கள் நியமனம் செய்யப் படுவதன் மூலம் கிராம பொதுமக்கள் அவரவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள துணை சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைந்த தாய்சேய் நலன், குடும்ப கட்டுப்பாடு சேவைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள், தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான ஆரம்ப சிகிச்சைகள், முதியோர் நலன், கண் மற்றும் காது சார்ந்த சேவைகள், அடிப்படை பல் மருத்துவம் உள்ளிட்ட மருத்துவ சேவைகளை பெற்று பயனடையவும், மேலும் **2,448** புதிய சுகாதார ஆய்வாளர்கள் நியமனம் மூலம் நோய் தடுப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்த ரூபாய் 17.42 கோடி நடப்பு நிதியாண்டில் செலவிடப்படும்.

## 17) முதியோர் மன நலம் காக்க, அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் முதியோர் மறதி நோய்க்கான தனி சிகிச்சை பிரிவு தொடங்கப்படும்

தேசிய சுகாதார குழுமம், தொண்டு நிறுவனத்துடன் இணைந்து முதியவர்களுக்கு வயது மூப்பின் காரணமாக ஏற்படும் மன அழுத்தம் மற்றும் மறதி நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்களின் நலன் காக்க **"முதியோர் மன நலம்"** சேவை தொடங்கப்படும். இச்சேவைகளை வழங்குவதற்காக தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்படும் முதியோர் நலப் பிரிவு மருத்துவர்கள் மற்றும் வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு உரிய பயிற்சிகள் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்படும். மேலும் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் **முதியோர் மறதி நோய்க்கான தனி சிகிச்சைப் பிரிவு** தொடங்கப்பட்டு அவர்களுக்கு மன நல மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

**18) தமிழ்நாட்டில் தற்கொலை முயற்சிகளை தடுப்பதற்காக தொண்டு நிறுவனத்துடன் இணைந்து தற்கொலை தடுப்பு ஆலோசனை பயிற்சிகள் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் தற்கொலை முயற்சிகளை தடுப்பதற்காக இத்துறையில் நீண்ட அனுபவம் வாய்ந்த தொண்டு நிறுவனத்துடன் இணைந்து தற்கொலை தடுப்பு ஆலோசனை பயிற்சிகள் வழங்கப்படும்.

**19) வீடற்ற மக்களின் மன நலம் காக்கும் திட்ட வரைவு, உலக மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மன நல ஆராய்ச்சி பல்கலைக்கழக மன நல வல்லுநர்கள் உதவியுடன் உருவாக்கப்படும்.**

மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை, தேசிய சுகாதார குழுமம் இணைந்து ' **வீடற்ற மக்களின் மன நலம் காக்கும் திட்ட வரைவு'** உருவாக்கப்படும். இப்பணிக்காக உலகம் மற்றும் தேசிய அளவில் சிறந்து விளங்கும் மன நல ஆராய்ச்சி நிறுவனங்களின் வல்லுநர்களை உறுப்பினர்களாக கொண்டிருக்கும். அமெரிக்காவில் உள்ள பெனிசில்வேனியா பல்கலைக்கழகம், கார்னல் பல்கலைக்கழகம், நியுயார்க் பல்கலைக்கழகம், இங்கிலாந்து நாட்டில் உள்ள லான்செட் கமிஷன், நெதர்லாந்தில் உள்ள அத்தினா பல்கலைக்கழகம், இந்தியாவின் புகழ் பெற்ற டாடா சமுகவியல் பல்கலைக்கழகம், பெங்களுரில் அமைந்துள்ள தேசிய மன நல மற்றும் நரம்பியல் ஆராய்ச்சி நிறுவனம், பாணியன் நிறுவனம் மற்றும் சென்னை அரசு தலைமை மன நல மருத்துவமனை மருத்துவர்கள் சிறப்பு வல்லுநர்களாக அமைவார்கள். இக்குழு உருவாக்கும் திட்ட வரைவு வீடற்ற சமுகத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழும் மக்களின் மன நலனை பேணிக் காக்கவும், அவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் போது அவர்களின் உரிமை மற்றும் கண்ணியம் பாதுகாக்கும் வகையிலும் வடிவமைக்கப்படும்.

**20) பெருநகர சென்னை மாநகராட்சியில் 13 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 9.75 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் –1 திருவொற்றியூர்–குப்பம் மற்றும் சாத்தான்காடு, மண்டலம்–4 தண்டையார்பேட்டை– புதியவண்ணாரப்பேட்டை, மண்டலம் –5 ராயபுரம்– சஞ்சீவராயன்பேட்டை, புதுப்பேட்டை, மண்டலம் –6 திரு.வி.க. நகர்–பெரியார்நகர் மற்றும் சூளை, மண்டலம்–9 தேனாம்பேட்டை–புஷ்பாநகர், சமுதாயகல்லூரி, திருவல்லிக்கேணி, மண்டலம் –10 கோடம்பாக்கம்– தியாகராயநகர், மண்டலம் –11 வளசரவாக்கம்–மதுரவாயல், மண்டலம்–14 பெருங்குடி–பாலவாக்கம் ஆகிய 13 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூபாய் 75 இலட்சம் வீதம் ரூபாய் 9.75 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**21) 108 அவசரகால ஊர்திகள் சேவையை (108 Emergency Ambulance Services) மேலும் வலுப்படுத்த, ரூபாய் 69.18 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 188 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் தற்போது 1,303 ஆம்புலன்ஸ்களுடன் '108' அவசரகால ஊர்திகள் சேவை (108 Emergency Ambulance Services) செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், கூடுதலாக 188 புதிய அவசரகால சேவை வாகனங்கள் ரூபாய் 69.18 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதன் மூலம் விபத்து மற்றும் அவசரகாலங்களில் நோயாளிகள் அவசர வாகன சேவைக்காக காத்திருக்கும் நேரம் குறையும்.

**22) அனைத்து மருத்துவத் துறை பணியாளர்களுக்கும் கோவிட் பெருந்தொற்று தொடர்பான தகவல் தொழில்நுட்ப மேலாண்மை பயிற்சிகள் ரூபாய் 9.23 கோடி செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களுக்கு கோவிட் பெருந்தொற்று மேலாண்மை, குழந்தைகளுக்கான கோவிட் பெருந்தொற்று சிகிச்சை, கோவிட் தடுப்பூசி, தகவல் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவை குறித்த சிறப்புப் பயிற்சிகள் ரூபாய் 9.23 கோடி செலவில் வழங்கப்பட்டு அவர்களது பணித்திறன் மேம்படுத்தப்படும்.

**23) 12 அரசு மருத்துவமனைகளில் 105 DNB (Diplomate of National Board) உயர் மருத்துவ பட்டய படிப்புகள் ரூபாய் 8.09 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

கோவில்பட்டி, ஈரோடு, கடலூர், காஞ்சிபுரம், சிதம்பரம், பொள்ளாச்சி, பெரம்பலூர், காரைக்குடி ஆகிய 8 அரசு மருத்துவமனைகளிலும் விருதுநகர், திண்டுக்கல், இராமநாதபுரம், நாமக்கல் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ரூபாய் 8.09 கோடி செலவில் மயக்கவியல், குடும்பநல மருத்துவம், மகப்பேறு மருத்துவம், கண் மருத்துவம், காசநோய் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், கதிரியக்க சிகிச்சை முறை ஆகியவற்றில் 105 உயர் மருத்துவ பட்டய படிப்புகள் ( Diplomate of National Board) ஏற்படுத்தப்படும்.

**24) தமிழகத்தில்உள்ளஅனைத்துகர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் நபர்களுக்கு (High Risk Group) ஹெபடைடிஸ்–பி மற்றும் சி வைரஸை கண்டறிந்து (Universal Screening) அவர்களுக்கு ரூபாய் 8.19 கோடி செலவில்சிகிச்சை வழங்கப்படும்.**

ஹெபடைடிஸ்–பி மற்றும் சி ( Hepatitis B and C) ஆகிய கல்லீரலை பாதிக்கும் உயிர்க்கொல்லி வைரஸினால் ஏற்படும் இழப்புகளை தடுக்கும் விதமாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ( Ante–natal Mothers) ஹெபடைடிஸ்–பி கண்டறியும் பரிசோதனை, வைரஸ் தொற்று பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிறக்கும் பச்சிளங் குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ்–பி இம்யுனோகுளோபிளின் சிறப்பு தடுப்பூசி ( Immunoglobulin) மற்றும் அதிக பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய நபர்களுக்கு (High Risk Group) ஹெபடைடிஸ்–பி மற்றும் சி நோய்களை கண்டறிவதற்கான பரிசோதனை, தொற்றை உறுதிபடுத்த – வைரஸ் அளவீடு பரிசோதனைகள் மற்றும் உயர்தர சிகிச்சைகள் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள பிரத்யேக கல்லீரல் அழற்சி மையம் மற்றும் ஆய்வகங்களுக்கு ரூபாய் 8.19 கோடி செலவில் சிகிச்சை வழங்கப்படும்.

**25) பெருநகர சென்னை மாநகராட்சியில் சஞ்ஜீவராயன் பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 100 படுக்கை வசதியுடன் ரூபாய் 8 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 5 ராயபுரம் – சஞ்ஜீவராயன் பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூபாய் 8 கோடி செலவில் 100 படுக்கை வசதியுடன் உயர்தர மருத்துவமனையாக மேம்படுத்தப்படும். இதன் மூலம் மகப்பேறு மருத்துவ சேவைகள், டயாலிசிஸ் சிகிச்சை, குழந்தை நலம், பொது மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை, பல் மருத்துவம் மற்றும் மயக்கவியல் சேவைகள் அளிக்கப்பட்டு வட சென்னை பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் பயனடைவார்கள்.

**26) உளுந்தூர்பேட்டை, ஓசூர், ஜெயம்கொண்டம், பொள்ளாச்சி மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய 5 மாவட்ட மருத்துவமனைகளில் 'ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை' ( Trauma Emergency Care Centre) சேவைகளை மேம்படுத்த ரூபாய் 17.07 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

கள்ளக்குறிச்சி மாவட்டம்–உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூபாய் 6.17 கோடி செலவிலும், கிருஷ்ணகிரி மாவட்டம்–ஓசூர் அரசு மருத்துவமனை மற்றும் அரியலூர் மாவட்டம்–ஜெயம் கொண்டம் அரசு மருத்துவமனைகளில் தலா ரூபாய் 4 கோடி செலவிலும், கோயம்புத்தூர் மாவட்டம்–பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனையில் ரூபாய் 1.90 கோடி செலவிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம்–பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிலும் மொத்தம் ரூபாய் 17.07 கோடி செலவில் ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை பிரிவிற்கு ( Trauma Emergency Care Centre) புதிய கட்டடங்கள் கட்டப்படும். இதன் மூலம் உயிர்காக்கும் அவசர சிகிச்சை சேவைகள் மேலும் துரிதமாக கிடைத்திட வழிவகுக்கும்.

**27) காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்டங்களில் குழந்தை நல மாவட்ட முன் இடையீட்டு மையங்கள் (District Early Intervention Center) ரூபாய் 7.07 கோடி செலவில் அமைக்கப்படும்.**

காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தென்காசி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் / அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 7.07 கோடி செலவில் குழந்தைகளுக்கான மாவட்ட முன் இடையீட்டு மையங்கள் ( District Early Intervention Center) அமைக்கப்படும். இம்மையங்களில் குழந்தைகள் நல மருத்துவர், மருத்துவ அலுவலர், செவிலியர், செவித்திறன், பேச்சுத்திறன் சிகிச்சையாளர், பல் மருத்துவர், இயன்முறை சிகிச்சையாளர், ஆக்குபேஷனல் சிகிச்சையாளர் ( Occupational Therapist) உள்ளிட்ட 12 மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா பணியாளர் குழு 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சைகள் வழங்குவார்கள்.

**28) 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிக்கும் நோக்கில் ரூபாய் 7 கோடி செலவில் 10 ஊடுகதிர் வாகனங்கள் வழங்கப்படும்**

தேசிய காசநோய் ஒழிப்பு திட்ட வரையறையின் கீழ் 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிக்கும் நோக்கில் ( National TB Elimination Program) காசநோய் கண்டறிவதற்கான நடமாடும் 10 ஊடுகதிர் வாகனம் (Mobile X–ray Van) ரூபாய் 7 கோடி செலவில் அரியலூர், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், தென்காசி, மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு புதிதாக வழங்கப்படும்.

**29) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பேறுகால சேவையை மேம்படுத்த 'லக்ஷயா' ( LaQshya) திட்டத்தின் கீழ் ரூபாய் 6.31 கோடி செலவிடப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பேறுகால சேவையை மேம்படுத்தும் நோக்கில் **'லக்ஷயா' (LaQshya)** திட்டத்தின் கீழ் ரூபாய் 6.31 கோடி செலவில் பிரசவ அறைகள், மகப்பேறு அறுவை சிகிச்சை மையகங்களில் பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும்.

**30) 13 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா ரூபாய் 45 லட்சம் வீதம் ரூபாய் 5.85 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.**

கடலூர் மாவட்டம்–திருப்பாதிரிபுலியூர், மதுரை மாவட்டம்–சிந்தாமணி, முனிசாலை, சாத்தமங்கலம், திருப்பரங்குன்றம், திருப்பூர் மாவட்டம்–மேட்டுப்பாளையம் நெசவாளர் காலனி, விருதுநகர் மாவட்டம்–விருதுநகர், திருநெல்வேலி மாவட்டம்–பாட்டபத்து, எம்.விபுரம், கொக்கிரகுளம், தேனி மாவட்டம்–பெரியகுளம், கம்பம் ஆகிய 13 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்த தலா ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் 5.85 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

**31) 11 ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் இரத்த வங்கிகள் ( CEmONC Blood Bank) ரூபாய் 5.50 கோடி செலவில் நிறுவப்படும்.**

அரியலூர் மாவட்டம்–ஜெயங்கொண்டம், கரூர் மாவட்டம்–குளித்தலை, மதுரை மாவட்டம்–திருமங்கலம், சேலம் மாவட்டம்–ஓமலூர், தேனி மாவட்டம்–போடிநாயக்கனூர், திருவள்ளூர் மாவட்டம்–பொன்னேரி மற்றும் திருத்தணி, திருவண்ணாமலை மாவட்டம்–ஆரணி, திருவாரூர் மாவட்டம்–திருத்துறைபூண்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம்–திருக்கோவிலூர், விருதுநகர் மாவட்டம்–ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 11 அரசு மருத்துவமனைகளில் அதிக தாய்மார்களை கையாளும் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் ரூபாய் 5.50 கோடி செலவில் இரத்த வங்கிகள் ( CEmONC Blood Bank) நிறுவப்படும்.

**32) 17 புதிய RT–PCR பரிசோதனை கருவிகள் ரூபாய் 5.10 கோடி செலவில் வழங்கப்படும்.**

2021–22–ஆம் ஆண்டில் கொரோனா நோய் கண்டறியும் 17 புதிய RT–PCR பரிசோதனை கருவிகள் தேவைப்படும் ஆய்வகங்களுக்கு ரூபாய் 5.10 கோடி செலவில் வழங்கப்படும்.

**33) மதுரை மற்றும் கோவையில் உள்ளஅரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான 'ஒப்புயர்வு மையங்கள்'** (Center of Excellence) **ரூபாய் 5 கோடி செலவில் அமைக்கப்படும்.**

கோவிட் பெருந்தொற்றை கருத்தில் கொண்டு குழந்தைகளுக்கான ' **ஒப்புயர்வு மையங்கள்'** ( Center of Excellence) கூடுதலாக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 5 கோடி செலவில் அமைக்கப்படும். இந்த ஒப்புயர்வு மையங்கள் இணையவழி மூலமாக இதர மாவட்டங்களில் உள்ள குழந்தை நல மருத்துவர்களுக்கு நிபுணத்துவம் வாய்ந்த சிறந்த மருத்துவர்களால் கொரோனா பெருந்தொற்று குறித்த ஆலோசனை மற்றும் சிகிச்சை மேலாண்மை அளிக்கப்படும்.

**34) 16 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா ரூபாய் 25 இலட்சம் வீதம் ரூபாய் 4 கோடி செலவில் செவிலியர் குடியிருப்புகள் கட்டப்படும்.**

ஆரம்ப சுகாதார சேவைகளை 24 மணிநேரமும் தங்குதடையின்றி கிடைத்திட அரியலூர் மாவட்டம்–டி.பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்–மேடவாக்கம், புதுக்கோட்டை மாவட்டம்–விராச்சிலை, முத்துப்பட்டிணம், திண்டுக்கல் மாவட்டம்–ஐயம்பாளையம், காஞ்சிபுரம் மாவட்டம்–சாலவாக்கம், கரூர் மாவட்டம்–நச்சலூர், தூத்துக்குடி மாவட்டம்–ஈராட்ச்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்–உரிகம், நாகபட்டிணம் மாவட்டம்–திருமருகல், நாமக்கல் மாவட்டம்–திம்மராவுத்தம்பட்டி, விருதுநகர் மாவட்டம்–எரிசனத்தம், திருவள்ளூர் மாவட்டம்–கவரப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம்–அடிஅண்ணாமலை, வேலூர் மாவட்டம்–பீஞ்சமந்தை, விழுப்புரம் மாவட்டம்–மேல்செவலம்பாடி ஆகிய 16 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 4 கோடி செலவில் செவிலியர் குடியிருப்புகள் கட்டப்படும்.

**35) 74 பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை மையங்களுக்கு (Special Newborn Care Unit) ரூபாய் 3.83 கோடி செலவில் நவீன உபகரணங்கள் வழங்கப்படும்.**

பச்சிளம் குழந்தைகள் சிகிச்சைக்காக ரூபாய் 3.83 கோடி செலவில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அமைந்துள்ள 74 சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கு ( Special Newborn Care Unit) சிரிஞ்சி பம்ப், வார்மர், போட்டோதெரபியூனிட், மல்டிபாராமானிட்டர், சிபேப், ஆகிய நவீன உபகரணங்கள் வழங்கப்படும். இதன் வாயிலாக பச்சிளங் குழந்தைகளுக்கு உயர் சிகிச்சைகள் அளிக்கப்படும்.

**36) முதல்முறையாக தமிழ்நாட்டில் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 'அரியவகை இரத்த சிவப்பணுக்கள் உறைநிலை சேமிப்பு அலகு' (Frozen Red Blood Cell Storage Unit) ரூபாய் 3.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் முதல்முறையாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அவசர மற்றும் பேரிடர்கால மேலாண்மைக்காக அரியவகை இரத்த சிவப்பணுக்கள் உறைநிலை சேமிப்பு அலகு ( Frozen RedBlood Cell Storage Unit) ரூபாய் 3.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**37) 3 தாய்சேய் நல திறன் பயிற்சி பள்ளிகளில் ரூபாய் 3.55 கோடி செலவில் புதிய விடுதிகள் கட்டப்படும்.**

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையின் கீழ் செயல்படும் மதுரை மாவட்டம்–சமயநல்லூர், நாமக்கல் மாவட்டம்–மாணிக்கம்பாளையம் மற்றும் திருநெல்வேலி தாய்சேய் நல திறன் பயிற்சி பள்ளி ஆகிய 3 பயிற்சி பள்ளிகளில் புதிய தங்கும் விடுதிகள் ரூபாய் 3.55 கோடி செலவில் அமைக்கப்படும்.

**38) காது கேளாமை தடுப்பு சிகிச்சைக்காக அனைத்து மருத்துவப் பணியாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் 14 அரசு மருத்துவமனைகளில் ஒலிபுகா அறைகள் (Sound Proof Room)ரூபாய் 4.22 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

அனைத்து மாவட்டங்களிலும் **தேசிய காது கேளாமை தடுப்பு மற்றும் கட்டுபாட்டு திட்டத்தின்** கீழ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் முதல் துணை சுகாதாரம் நிலையம் வரை உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் 7 கட்ட பயிற்சிகள் ரூபாய் 3.52 கோடி செலவில் அளிக்கப்படும்.

மேலும், நீலகிரி, விருதுநகர், நாமக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர், திண்டுக்கல், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, திண்டிவனம் ஆகிய 13 அரசு மருத்துவமனைகளில் மற்றும் விழுப்புரம் மாவட்டம்–முகையூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தலா ரூபாய் 5 இலட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் ஒலிபுகா அறைகள் ( Sound Proof Room) ஏற்படுத்தப்படும். இதன் மூலம் காது கேளாமை நோயை உரிய நேரத்தில் கண்டறிந்து சிகிச்சை வழங்க வழிவகை செய்யப்படும்.

**39) 11 அரசு மருத்துவமனைகளுக்கு காது கேளாமை தடுப்பு சிகிச்சைக்காக உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் ரூபாய் 2.25 கோடி செலவில் வழங்கப்படும்.**

வாலாஜாபேட்டை, மயிலாடுதுறை, தென்காசி, திருப்பத்தூர், திண்டிவனம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பூர், விருதுநகர் ஆகிய 11 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு காது கேளாமை தடுப்பு சிகிச்சைக்காக உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்களான (Hightech Ear Equipment) மைக்ரோஸ்கோப், ஒ.ஏ.இ. பெரா (OAE with BERA), ஆடியோகிராம் ஆகியவை ரூபாய் 2.25 கோடி செலவில் வழங்கப்படும். இதனால் சிறியவர்கள் முதல் முதியோர்கள் வரை அனைவருக்கும் காது கேளாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அறுவை சிகிச்சை மூலம் உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் சரிசெய்யப்படும்.

**40) கண் அறுவை சிகிச்சைஅரங்கங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 5.70 கோடி செலவில் புதிதாக வழங்கப்படும்**

இராணிப்பேட்டை மாவட்டம்–அரக்கோணம், புதுக்கோட்டை மாவட்டம்–அறந்தாங்கி, இராமநாதபுரம் மாவட்டம்–பரமகுடி மற்றும் சேலம் மாவட்டம்–ஆத்தூர் அரசு மருத்துவமனைகள், தூத்துக்குடி மாவட்டம்–கோவில்பட்டி மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை ஆகியவற்றில் கண் அறுவை சிகிச்சை அரங்கங்கள் தலா ரூபாய் 70 இலட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 3.5 0 கோடி செலவில் புதிதாக அமைக்கப்படும்.

மேலும்,திருவள்ளூர், தென்காசி, திருப்பத்தூர், பெரியகுளம், ஆற்காடு, ஸ்ரீரங்கம், மேட்டூர், பத்மநாபபுரம் ஆகிய மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 2.20 கோடி செலவில் ஆப்தால்மோஸ்கோப் ( Ophthalmoscope), ரெட்டினோஸ்கோப் போன்ற நவீன கண் சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்படும்.

**41) கரூர், நாகப்பட்டினம் , திருவண்ணாமலை, தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்குநடமாடும் கண் சிகிச்சை வாகனங்கள் ரூபாய் 1.50 கோடி செலவில் வழங்கப்படும்.**

கரூர் மற்றும் நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், திருவண்ணாமலை மாவட்டம்–செய்யார், தஞ்சாவூர் மாவட்டம்–கும்பகோணம், மற்றும் கடலூர் ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு கண் பரிசோதனை மேற்கொள்ள ரூபாய் 1.50 கோடி செலவில் 5 நடமாடும் கண் சிகிச்சை வாகனங்கள் வழங்கப்படும் . இதன் மூலம் தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகள் மேம்படுத்தப்படும்.

**42) காசநோய்இல்லா தமி ழ்நாட்டைஉருவாக்க தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் விவரங்களை அரசுக்கு தெரிவிக்கும் முறையை ஊக்கப்படுத்த** (Patient – Provider Support Agency) **ரூபாய் 7.16 கோடி செலவிடப்படும்.**

தேசிய காசநோய் ஒழிப்பு திட்ட இலக்கான 2025–ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிக்கும் நோக்கில் புதுக்கோட்டை, திருவாரூர், காஞ்சிபுரம், கரூர், பெரம்பலூர், தேனி, திருவள்ளூர், நீலகிரி, தூத்துக்குடி, கடலூர், திருவண்ணாமலை, விருதுநகர், இராமநாதபுரம், விழுப்புரம், திண்டுக்கல், சென்னை, கிருஷ்ணகிரி, சிவகங்கை, நாமக்கல், கன்னியாகுமரி, வேலூர், தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 23 மாவட்டங்களிலும், தூத்துக்குடி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிகளிலும் தனியார் மருத்துவமனைகள் காசநோயை கண்டறிந்து அரசுக்கு தெரிவிக்கும் முறை (Patient – Provider Support Agency) ஊக்கப்படுத்தும் ரூபாய் 7.16 கோடி செலவில் ஊக்கப்படுத்தப்படும்.

**43) 7 மாவட்டங்களில் காசநோய் அறிகுறிகள் குறித்த கணக்கெடுப்பு மற்றும் 3 மாவட்டங்களில் இக்ரா (IGRA) பரிசோதனை மூலம் காசநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்க ரூபாய் 3.85 கோடி செலவிடப்படும்.**

2025–இல் காசநோய் இல்லா தமிழ்நாட்டை உருவாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஒன்றாக தூத்துக்குடி, கரூர், சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 3.38 கோடி செலவில் சமூக அளவில் காசநோய் அறிகுறிகள் ( vulnerability mapping) குறித்த கணக்கெடுப்பு மருத்துவத் துறை ஊழியர்கள் மூலம் மேற்கொள்ளப்படும். திருவண்ணாமலை, திருவள்ளூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் உள்ள மற்ற நோய் அறிகுறியில்லாத 18 வயது மேற்பட்ட நபர்களுக்கு ( Latent Tuberculosis) காசநோய் இக்ரா ( IGRA) பரிசோதனை மூலம் நோயின் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படும். இதற்காக ரூபாய் 47.12 இலட்சம் செலவிடப்படும்.

**44) 40 டயாலிசிஸ் (Dialysis) புதிய கருவிகள் ரூபாய் 2.60 கோடி செலவில் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்.**

நாள்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் ( Chronic Kidney Disease) சிகிச்சைக்காக, தனியார் மையங்களில் செலவிடப்படும் தனிமனித செலவீனங்களை குறைக்கும் பொருட்டு, நடப்பு ஆண்டில் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 6 கருவிகள், கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு 4 கருவிகள், புதுக்கோட்டை மாவட்டம்–திருமயம் அரசு மருத்துவமனைக்கு 10 கருவிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–துறையூர் அரசு மருத்துவமனைக்கு 6 கருவிகள், அரியலூர் மாவட்டம்–செந்துறை அரசு மருத்துவமனைக்கு 5 கருவிகள், மயிலாடுதுறை மாவட்டம்–சீர்காழி அரசு மருத்துவமனைக்கு 4 கருவிகள், திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு 3 கருவிகள், நாமக்கல் மாவட்டம்–பரமத்திவேலூர் அரசு மருத்துவமனைக்கு 2 கருவிகள் என 40 டயாலிசிஸ் (Dialysis) புதிய கருவிகள் ரூபாய் 2.60 கோடி செலவில் வழங்கப்படும்.

**45) வேலூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகளில் 30 படுக்கை வசதி கொண்ட சமுதாய நல மையங்கள் தலா ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் ரூபாய் 3 கோடி செலவில் கட்டப்படும்.**

மாநகராட்சி பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு தேசிய நகர்ப்புற நலவாழ்வு குழுமத்தின் மூலம் சிறப்பு மருத்துவ சிகிச்சைகளை மேம்படுத்தவும் மற்றும் பெருந்தொற்று காலங்களில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படும் நெருக்கடி நிலையை கையாளும் விதமாக, 2.5 இலட்சம் மக்கள் தொகைக்கு, ஒரு **நகர்ப்புற சமுதாய நல மையம்** (Urban Community Health Centre) அமைக்கும் வகையில் இந்நிதி ஆண்டில் ஆவடி மாநகராட்சியில் உள்ள விளிஞ்சியம்பாக்கம், வேலூர் மாநகராட்சியில் உள்ள தொரப்பாடி ஆகிய இடங்களில் தலா ரூபாய் 1.50 கோடி செலவில் மொத்தம் ரூபாய்3 கோடியில் 30 படுக்கை வசதி கொண்ட சமுதாய நல மையங்களாக தரம் உயர்த்தப்பட்டு பல்துறை மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படும்.

**46) பிரத்யேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அலகு சிகிச்சை மையம் ( Paediatric Bone Marrow Transplant Unit) சென்னை எழும்பூர் அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூபாய் 2.56 கோடி செலவில் அமைக்கப்படும்.**

குழந்தைகளுக்கு நோய்த் தொற்று மற்றும் கீமோதெரபி சிகிச்சை மூலமாக சேதமடையும் எலும்பு மஜ்ஜையை மாற்றுவதற்காக சென்னை எழும்பூர் அரசு சிறார் நல நிலையம் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் குழந்தைகளுக்கான பிரத்யேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அலகு சிகிச்சை மையம் (Paediatric Bone Marrow Transplant Unit) ரூபாய் 2.56 கோடி செலவில் அமைக்கப்படும்.

**47) மரபணு பகுப்பாய்வு கூடம் ( Whole Genome Sequencing)ரூபாய் 4 கோடி செலவில் சென்னை டி.எம்.எஸ். வளாக பொது சுகாதார ஆய்வகத்தில் நிறுவப்படும்.**

கொரோனா நோய்த் தொற்றின் தீவிரம் மற்றும் தன்மை குறித்த முழு மரபணு பகுப்பாய்வு முறையை மற்றும் வைரஸ் பரவுதலை கண்டறிய உதவும் மரபணு பகுப்பாய்வு கூடம் ( Whole Genome Sequencing) ரூபாய் 4 கோடி செலவில் டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதார ஆய்வகத்தில் நிறுவப்படும்.

**48) சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு புதிதாக 5 மருத்துவமனைகளிலும், வெளி மருத்துவமனைகளிலிருந்து வரும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ரூபாய் 3.87 கோடி செலவீட்டில் உருவாக்கப்படும்.**

சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு (Special Newborn Care Unit) இராணிப்பேட்டை மாவட்டம்–வாலாஜா அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் தேனி மாவட்டம்–பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, விழுப்புரம் மாவட்டம்–திண்டிவனம் அரசு மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி மாவட்டம்–அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை, திருப்பத்தூர் மாவட்டம்–புதூர்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் (மலைப்பகுதி சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு) ஆகிய அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 2.37 கோடி செலவில் மருத்துவர்கள், செவிலியர்கள் பணியமர்த்துவதோடு, மருத்துவ உபகரணங்களும் வழங்கப்படும்.

மதுரை இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனைகளில் பிற மருத்துவமனைகளிலிருந்து

பரிந்துரைக்கப்படும் பச்சிளம் குழந்தைகளுக்கு தனிக் கவனத்துடன் சிகிச்சை அளிக்க, சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு ( Extra Mural SNCU) ஏற்படுத்தப்படும். இப்பிரிவிற்கு மல்டிபாராமானிட்டர், பல்ஸ் ஆக்ஸிமீட்டர், சிபேப், சிரிஞ்சி பம்ப், வார்மர் மற்றும் போட்டோதெரபி உள்ளிட்ட கருவிகள் ரூபாய் 1.5 0 கோடி செலவில் வழங்கப்படும்.

**49) 10 மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாடு மையங்கள் ரூபாய் 2.35 கோடியில் செலவில் நிறுவப்படும்.**

தூத்துக்குடி, கன்னியாகுமரி, அரியலூர், பெரம்பலூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருவள்ளூர், வேலூர், தருமபுரி ஆகிய 10 மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாடு மையங்கள் ( Tobacco Control Cell) ரூபாய் 2.35 கோடி செலவில் நிறுவப்படும்.

**50) சிறப்பு குழந்தைகளுக்கான உணர்திறன் சிகிச்சை பூங்கா (Sensory Therapeutic Park) ரூபாய் 2.24 கோடி செலவில் 16 மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.**

சென்னை ஸ்டான்லி, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை, கரூர், தஞ்சாவூர் இராஜா மிராசுதார், நாமக்கல், திருவண்ணாமலை, நீலகிரி, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கடலூர் மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகியவற்றில் சிறப்பு குழந்தைகளுக்கான ( Special Child) உணர்திறன் சிகிச்சை பூங்கா ( Sensory Therapeutic Park) ரூபாய் 2.24 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**51) இரத்த சேகரிப்பு பைகளை கண்காணிக்க 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கதிரியக்க அலைவீச்சு கருவி ( Radio Frequency Identification Device) ரூபாய் 2.08 கோடி செலவில் வழங்கப்படும்.**

மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைகளில் செயல்படும் இரத்த வங்கிகளில், இரத்த வகைபாடுகளை ( Blood grouping) உறுதிபடுத்தவும், நோயாளிகளுக்கு சரியான இரத்த வகைப்பாடுள்ள இரத்தம் செலுத்தி, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இரத்த சேகரிப்பு பைகளை கண்காணிக்க ரூபாய் 2.08 கோடி செலவில் கதிரியக்க அலைவீச்சு கருவி ( Radio Frequency Identification Device) வழங்கப்படும்.

**52) குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களை கண்டறியும் பயிற்சிகள் தென்காசி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு ரூபாய் 1.76 கோடி செலவில் வழங்கப்படும்.**

தென்காசி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு பள்ளி ஆசிரியர்களுக்கும் " **பள்ளி சிறார் நலக் கல்வித் திட்டம்"** மூலமாக பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களை கண்டறிந்து மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைக்கு பரிந்துரைக்க ரூபாய் 1.76 கோடி செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**53) சேலம் மாவட்டம்–கோனேரிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் குடியிருப்பு ரூபாய் 1.32 கோடி செலவில் கட்டப்படும்.**

சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர்கள் அங்கேயே தங்கி பணிபுரியும் வகையில் 4 குடியிருப்புகள் ரூபாய் 1.32 கோடி செலவில் கட்டப்படும்.

**54) 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு படுக்கை வசதியுடன் கூடிய மின் கல ஊர்தி (Battery Car with Stretcher) ரூபாய் 1.30 கோடி செலவில் வழங்கப்படும்.**

சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம், இராயப்பேட்டை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனை, தருமபுரி, IRT பெருந்துறை, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கரூர், மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், விருதுநகர், செங்கல்பட்டு, மற்றும் திண்டுக்கல் ஆகிய 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் மருத்துவ வளாகத்திற்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நோயாளியை தேவைப்படும் சிகிச்சையை மேற்கொள்ள கொண்டு செல்வதற்கு, படுக்கை வசதியுடன் கூடிய மின் கல ஊர்தி ( Battery Car with Stretcher) ரூபாய் 1.30 கோடி செலவில் வழங்கப்படும்.

**55) 6 மாவட்டங்களில் புதிதாக மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் ரூபாய் 1.2 7 கோடி செலவில் உருவாக்கப்படும்.**

திருநெல்வேலி, விழுப்புரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களில் ஏற்படக்கூடிய கொள்ளை நோய்களை (Epidemic) ஆய்வக பரிசோதனை மூலம் உறுதிசெய்து, நோய் கண்காணிப்பு பணியினை தீவிரப்படுத்தவும், நோய் பரவலை தடுக்கவும் மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள் (District Public Health Laboratory) ரூபாய் 1.27 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**56) ஒருங்கிணைந்த நச்சு மேலாண்மை ஒப்புயர்வு மையங்கள் ( Comprehensive Poison Management Centres)பொள்ளாச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் ஹப் மற்றும் ஸ்போக் முறையில் ஒருங்கிணைந்த நச்சு மேலாண்மை ஒப்புயர்வு மையங்கள் ( Comprehensive Poison Management Centres) ஏற்படுத்தப்படும்.

**57) 19 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு நவீன கருவிகள் ரூபாய் 1.27 கோடி செலவில் வழங்கப்படும்.**

ஒருங்கிணைந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்த திண்டுக்கல் மாநகராட்சி–பழனிரோடு, சவேரியார் பாளையம், மரியநாதபுரம், வேலூர் மாநகராட்சி–கொணவட்டம், தொரப்பாடி, தரப்படவேடு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி–பீமாநகர், காட்டூர், கோயம்புத்தூர் மாநகராட்சி–இரத்தினபுரி, சேலம் மாநகராட்சி–சுப்ரமணியநகர், மதுரை மாநகராட்சி–பைக்காரா, தருமபுரி மாவட்டம்–தருமபுரி, தஞ்சாவூர் மாவட்டம்–பட்டுக்கோட்டை, தென்காசி மாவட்டம்–கிருஷ்ணாபுரம், விருதுநகர் மாவட்டம்–அருப்புக்கோட்டை, திருப்பத்தூர் மாவட்டம்–வாணியம்பாடி, திருவள்ளூர் மாவட்டம்–திருவள்ளூர், கோவில்பட்டி சுகாதார மாவட்டம்–ஸ்ரீராம் நகர், விழுப்புரம் மாவட்டம்–கீழ்பெரும்பாக்கம், ஆகிய 19 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு ரூபாய் 1.27 கோடி மதிப்பீட்டில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், மல்ட்டிபாராமானிட்டர், ஈ.சி.ஜி, மற்றும் செமிஆட்டோ அனலைசர் கருவிகள் வழங்கப்படும்.

**58) தாய்ப்பால் வங்கிகள் ( Human Breast Milk Bank) 12 அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 1.2 0 கோடி செலவில் நிறுவப்படும்.**

அரியலூர், கள்ளக்குறிச்சி, கரூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், உதகமண்டலம், விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஓசூர், பழனி, ஈரோடு, அறந்தாங்கி, மணப்பாறை ஆகிய 12 அரசு மருத்துவமனைகளில் ரூபாய் 1.2 0 கோடி செலவில் தாய்ப்பால் வங்கிகள் ( Human Breast Milk Bank–Lactation Management Units) நிறுவப்படும்.

**59) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு யோகா பயிற்சிகள் ரூபாய் 1.19 கோடி செலவில் வழங்கப்படும்.**

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மக்களைத் தேடி மருத்துவ திட்ட – நலவாழ்வு மையங்களில் பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபாய் 1.19 கோடி செலவில் யோகா பயிற்சிகள் வழங்கப்படும்.

**60) 5,686 துணை சுகாதார நிலையங்களுக்கு இரத்த அழுத்தத்தை கண்டறியும் கருவிகள் ( BP Apparatus) ரூபாய் 1.14 கோடி செலவில் வழங்கப்படும்.**

தொற்றா நோய் கண்டறிதல் திட்டத்தின் கீழ் 5,686 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 1.14 கோடி செலவில் இரத்த அழுத்தத்தை கண்டறியும் கருவிகள் (BP Apparatus) வழங்கப்படும்.

**61) கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக 10 அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 1.10 கோடி செலவில் வழங்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள திருவொற்றியூர், மணலி, புழல், ஆர்.கே. நகர், புளியந்தோப்பு, பாடி, அயனாவரம், மீர்சாகிப்பேட்டை, வடபழனி மற்றும் போரூர் ஆகிய 10 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் ( Ultrasound Scan) கருவிகள் ரூபாய் 1.10 கோடி செலவில் வழங்கப்படும்.

**62) மாவட்ட மன நலத் திட்டம் ரூபாய் 85 இலட்சம் செலவில் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.**

செங்கல்பட்டு, திருப்பத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களில் ரூபாய் 85 இலட்சம் செலவில் மாவட்ட மன நலத் திட்டம் (District Mental Health Programme) விரிவுப்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் மூலமாக மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் மன நல உள்நோயாளிகள் பிரிவும், மாவட்டத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மன நல புறநோயாளிகள் பிரிவும் ஏற்படுத்தப்படும்.

**63) மலைவாழ் மக்களிடையே காணப்படும் மரபணு நோய்களுக்கான சிகிச்சை மைய கட்டடம் தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 75 இலட்சம் செலவில் கட்டப்படும்.**

மலைவாழ் மக்களிடையே காணப்படும் சிக்கில்செல் மற்றும் தலசீமியா எனப்படும் மரபணு நோய்களுக்கான சிகிச்சை மைய கட்டடம் தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 75 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**64) 1969–ஆம் ஆண்டு முதல் 2018–ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த பிறப்பு இறப்பு பதிவேடுகளை ( Civil Registration System) ரூபாய் 75 இலட்சம் செலவில் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.**

அனைத்து மாவட்டங்களிலும் 1969–ஆம் ஆண்டு முதல் 2018–ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த பிறப்பு இறப்பு பதிவுகளை ( Civil Registration System) இணையத்தில் பதிவேற்றம் செய்ய ரூபாய் 75 இலட்சம் செலவில் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பொதுமக்கள் பிறப்பு இறப்பு சான்றிதழ்களுக்காக உள்ளாட்சி அமைப்பு அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று அலையாமல், இணையவழி மூலமாக பிறப்பு இறப்பு சான்றிதழ்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**65) 14 மாநகராட்சிகளில் மருத்துவம் சார்ந்த தகவல்கள் GIS (Geographical Information System) செயலி மூலம் ரூபாய் 71 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.**

மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், தூத்துக்குடி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், வேலூர், ஓசூர் மற்றும் ஆவடி ஆகிய 14 மாநகராட்சிகளில் அனைத்து மருத்துவம் சார்ந்த தகவல்களை GIS (Geographical Information System) செயலி மூலம் ரூபாய் 71 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

**66) 15 அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கவும், 5 புதிய இரத்த சேமிப்பு மையங்களை ஏற்படுத்தவும் ரூபாய் 1.15 கோடி செலவிடப்படும்.**

வால்பாறை, சிதம்பரம், விருத்தாசலம், கடலூர், தாம்பரம், தேன்கனிக்கோட்டை, சீர்காழி, பரமக்குடி, இராமேஸ்வரம், கமுதி, ஓமலூர், கூடலூர், செய்யாறு, ஆரணி, திருத்துறைப்பூண்டி ஆகிய 15 அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்களுக்கு கூடுதல் உபகரணங்கள் ரூபாய் 61.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

மேலும்,நாமக்கல் மாவட்டம்–பரமத்திவேலூர், தூத்துக்குடி மாவட்டம்–விளாத்திகுளம், இராணிப்பேட்டை மாவட்டம்–ஆற்காடு, விழுப்புரம் மற்றும் திருத்தங்கல் அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு மையங்கள் தலா ரூபாய் 10 இலட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**67) 38 அரசு மருத்துவமனைகளுக்கு நுரையீரல் செயல்பாட்டினை கண்டறியும் ஸ்பைரோமீட்டர் (Spirometer) கருவி ரூபாய் 56.62 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

38 அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 56.62 இலட்சம் செலவில் நுரையீரல் செயல்பாட்டினை கண்டறியும் ஸ்பைரோமீட்டர் ( Spirometer) கருவிகள் வழங்கப்படும்.

**68) கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் மேக்னாவிசன் (Magna Vision) உபகரணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 42 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஏற்படும் கொடிய நோய்களில் ஒன்று கருப்பைவாய் புற்றுநோய், இந்நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்டும் நிலையில் 100 விழுக்காடு குணப்படுத்த முடியும். இதற்கு மேக்னாவிசன் உபகரணங்கள் மிகவும் உறுதுணையாக உள்ளது. இந்த உபகரணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 42 இலட்சம் செலவில் கூடுதலாக வழங்கப்படும்.

**69) உசிலம்பட்டி மற்றும் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு இதயநோய் பரிசோதனைக்காக எக்கோ (ECHO)கருவிகள் ரூபாய் 25.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

உசிலம்பட்டி, பெரம்பலூர் ஆகிய இரண்டு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு இதயநோய் பரிசோதனைக்காக எக்கோ ( ECHO) கருவிகள் ரூபாய் 25.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**70) 'சற்றே குறைப்போம்' என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு சர்க்கரை, உப்பு, எண்ணெய் பயன்பாட்டை படிப்படியாக குறைப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.**

தமிழர்களின் பாரம்பரிய உணவு சரிவிகித உணவாக இருந்தது. நமது புதிய வாழ்க்கை முறையில் சர்க்கரை, உப்பு, எண்ணெய் வகைகள், உடம்பின் தேவைக்கு அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். சரிவிகித உணவை உறுதிசெய்ய சர்க்கரை, உப்பு, எண்ணெய் வகைகளை அதிகமாக எடுத்துக் கொள்வதை படிப்படியாக குறைக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'சற்றே குறைப்போம்' என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**71) விடுதிகள், விழா காலங்களில் உபரி உணவை வீணாக்காமல் பயன்படுத்த பரீட்சார்த்தரீதியாக 10 மாவட்டங்களில் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படும்.**

நட்சத்திர விடுதிகளிலும், விழா காலங்களிலும், பயன்படுத்த உகந்த அதிகப்படியான உணவு, வீணாவதை தவிர்க்கும் விதமாக தன்னார்வு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, வீணாகக்கூடிய உபரி உணவை – உணவை நாடுகின்ற எளியோருக்கு சேர்க்கும் திட்டம், முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படும்.

**72) உபயோகித்த சமையல் எண்ணெயின் மறு பயன்பாட்டை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து பயோ – டீசல் உற்பத்தி செய்வது உறுதிப்படுத்தப்படும்.**

ஒருமுறை உபயோகித்த சமையல் எண்ணெய்யை மீண்டும், மீண்டும் உபயோகிப்பதால் உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், குடல் அழற்சி, மஞ்சள் காமாலை போன்ற பல்வேறு நோய்களுக்கு காரணமாகிறது. ஒரு முறை உபயோகித்த எண்ணெய்யை மீண்டும் உணவு தயாரிக்க பயன்படுத்துவதை தடுக்கவும், மறுபயன்பாடு செய்திட ஏதுவாக உணவகங்கள் மற்றும் துரித உணவு உற்பத்தியாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். ஒரு முறை உபயோகித்த சமையல் எண்ணெய்யை சேகரித்து அதிலிருந்து பயோ – டீசல் உற்பத்தி செய்வது உறுதிபடுத்தப்படும்.

| |
|---|
| **73) முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், 2022 ஜனவரி முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இதற்கென நடப்பாண்டில் ரூபாய் 1,248.29 கோடி செலவிடப்படும்** |

தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் வரும் ஜனவரி 2022–இல் முடிவு பெறுகிறது. அதனைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் அதிக சிகிச்சை முறைகளுடன், பொதுத் துறை காப்பீட்டு நிறுவனத்தின் மூலம், ஏழை எளிய திட்ட பயனாளிகள் அதிகபட்சம் ஆண்டு ஒன்றுக்கு குடும்பத்திற்கு ரூபாய் 5 இலட்சம் வரையில் கட்டணமில்லா சிகிச்சைபெறும் வகையில் செயல்படுத்தப்படும். இதற்கென நடப்பாண்டில் ரூபாய் 1,248.29 கோடி செலவிடப்படும்.

**74) மார்பக புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் மற்றும் சிகிச்சை கருவிகள் ரூபாய் 6.98 கோடி செலவில் வழங்கப்படும்.**

பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதம் மிக அதிகமாக உள்ளது. இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன் மூலம் உரிய சிகிச்சை முறையை துவங்கலாம். இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மார்பக புற்றுநோய் கண்டறியும் மேமோகிராம் ( Mammogram) கருவிகளும், 35 அரசு வட்டார மருத்துவமனைகள் மற்றும் 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தெர்மோகொயாகுலேட்டர் கருவிகளும், 176 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 12 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு செமிஆட்டோ அனலைசர் கருவிகளும் ரூபாய் 6.98 கோடி செலவில் வழங்கப்படும்.

**75) " கர்ப்பகால பரிசோதனை பெட்டகம் " அரியலூர், இராமநாதபுரம் உள்ளிட்ட 10 முன்னுரிமை மாவட்டங்களில் உள்ள 2,249 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 2.59 கோடி செலவில் வழங்கப்படும்.**

ஆரம்ப நிலையிலேயே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதன் காரணமாக வரும் வலிப்பு நோயினை தடுக்கவும் மற்றும் குழந்தையின் இருதய துடிப்பினை கண்டறியவும் டிஜிட்டல் இரத்த அழுத்தக் கருவி, எடை பார்க்கும் கருவி மற்றும் இருதய துடிப்பு கண்டறியும் கருவி ஆகியவைகள் அடங்கிய கர்ப்பகால பரிசோதனை பெட்டகம் ரூபாய் 2.59 கோடி செலவில் முன்னுரிமை மாவட்டங்களான அரியலூர், இராமநாதபுரம், தேனி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, நீலகிரி, தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 2,249 துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும்.

**76) விபத்து மற்றும் காயப் பதிவேடு (TAEI Registry) ரூபாய் 1.56 கோடி செலவில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுப்படுத்தப்படும்.**

அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறுவோரின் உடல்நிலையினை தொடர்ந்து கணினி மூலம் கண்காணிக்கும் வகையில் தற்போது விபத்து மற்றும் காயப் பதிவேடு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, விபத்து மற்றும் காயப் பதிவேடு ரூபாய் 1.56 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**77) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரத்தசோகை பரிசோதனைக் கருவி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 245 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 78 லட்சம் செலவில் வழங்கப்படும்**

விருதுநகர் மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களிடையே இரத்தசோகை அதிக அளவில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பேறுகாலத்தின் போது வரும் பின்விளைவுகளை தடுக்கும் வண்ணம் ஆரம்ப நிலையிலேயே இரத்தசோகை பரிசோதனை மேற்கொள்ள 245 சுகாதார நிலையங்களுக்கு இரத்தசோகை பரிசோதனை கருவி சுமார் ரூபாய் 78 இலட்சம் செலவில் வழங்கப்படும். இதனால் விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 25,000 கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்பெறுவர்.

**78) முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 72,000 வருமானம் உச்சவரம்பின்றி விரிவாக்கம் செய்யப்படும்.**

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் தற்போது ரூபாய் 72,000—ஆக உள்ளது. பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றும் வண்ணம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**79) சென்னை கொளத்தூர் – பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ரூபாய் 2.90 கோடி செலவில் மேம்படுத்தப்படும். மேலும் ரூபாய் 75 இலட்சம் செலவில் டயாலிசிஸ் (Dialysis) மையம் ஒன்றும் அமைக்கப்படும்.**

சென்னை கொளத்தூர், பெரியார் நகர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை சேவையை மேம்படுத்த வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் பெரியார்நகர் அரசு மருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் மனிதவளம் மேம்படுத்துவதற்காக சுமார் ரூபாய் 2.90 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மேலும் ரூபாய் 75 இலட்சம் செலவில் 10 கருவிகளுடன் புதிய டயாலிசிஸ் (Dialysis) மையம் ஏற்படுத்தப்படும்.

**80) மன நலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகளுக்கான மீட்பு சேவைகள் 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுபடுத்தப்படும்.**

மன நலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகளுக்கான மீட்பு சேவைகள் 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் (விழுப்புரம், திருவண்ணாமலை, திருநெல்வேலி நீங்கலாக) ஆரம்பிக்கப்படும். இம் மருத்துவமனைகளில் உள்ள மன நலப் பிரிவுகளில் 10 பிரத்யேக படுக்கைகள் ஒதுக்கப்பட்டு மன நலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகள் மீட்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும்.

**81) தாய்மார்களுக்கு பிரசவத்திற்குப் பிந்தைய மன அழுத்தத்தை தடுக்கும் விதமாக மன நல நிபுணர்களால் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும்.**

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மகப்பேறியல் துறையில் தாய்மார்களுக்கு பிரசவத்திற்குப் பிந்தைய மன அழுத்தத்தை தடுக்கும் விதமாக மன நல நிபுணர்களால் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும்.

**82) குழந்தைகள் "இணைய அடிமை" ( Internet Addiction) நோய்க்கு ஆளாவதை தடுக்க அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மன நல நிபுணர் குழுவால் சிறப்பு ஆலோசனை வழங்கப்படும்**

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் குழந்தைகள் நலப் பிரிவுகளில் குழந்தைகளிடையே அலைபேசி பயன்பாட்டை குறைக்கவும், இணைய அடிமை நோய்க்கு (Internet Addiction) ஆளாவதை தடுக்கவும் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்படும். இதற்கென ஆலோசகர்கள் மற்றும் மன நல நிபுணர்கள் அடங்கிய சிறப்பு குழு நியமிக்கப்படும்.

**83) அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும்முதியோர் மற்றும் மன நலம் குன்றியவர்களுக்கு "தினசரி பராமரிப்பு மையங்கள்" (Cognitive Rehabilitation Day Care Centres) ஏற்படுத்தப்படும்.**

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முதியோர் மற்றும் மன நலம் குன்றியவர்களுக்கு அறிவாற்றல் மறுவாழ்வுக்காக "தினசரி பராமரிப்பு மையங்கள்" (Cognitive Rehabilitation Day Care Centres) ஏற்படுத்தப்படும்.

**84) பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங் குழந்தைகளுக்கு "காது கேட்கும் திறன் பரிசோதனை சேவைகள்" வழங்கப்படும்.**

செவிப்புலன் பிரச்சனைகளுக்கான சிறப்பு பரிசோதனை சேவை அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், குழந்தைகளின் காது கேளாமை மற்றும் பேச்சுப் பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதற்காக, பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங் குழந்தைகளுக்கு "செவிப்புலன் பிரச்சனைகளுக்கான சிறப்பு பரிசோதனை சேவைகள்" நிறுவப்படும்.

**85) உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்களுக்கு புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் செய்யப்படும்.**

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த நோய்க்கான சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தாலும் புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் செய்யப்படும்.

**86) தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு மையம் (Pulmonary Rehabilitation Centre) நிறுவப்படும்.**

தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் கோவிட் – நுரையீரல் மறுவாழ்வு மையம் நிறுவப்படும். இதன் மூலம் கோவிட் பெருந்தொற்றின் பிந்தைய பாதிப்பாக நுரையீரலில் ஏற்படக்கூடிய சுகாதார பிரச்சனைகளை ஆரம்ப நிலையிலேயே சரிப்படுத்த சிகிச்சைகள் மற்றும் இயன்முறை ( Physiotherapy) பயிற்சிகள் வழங்கப்படும்.

**87) அதிநவீன அவசர சிகிச்சைத் துறை (Emergency Department)11 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும்**

அனைத்து 11 புதிய மருத்துவக் கல்லூரிகளிலும் பின்வரும் உள்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய அதிநவீன அவசர சிகிச்சைத் துறை நிறுவப்படும். ஆம்புலன்சுகளுக்கு பிரத்யேகமான நுழைவாயில் மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்படும். பச்சை, மஞ்சள் மற்றும் சிவப்பு மண்டலங்களுக்கான முத்தரப்பு சிகிச்சை. இ–ஃபாஸ்ட் எக்ஸ்ரே, அல்ட்ராசோனோகிராம், ஆய்வகம், இரத்த வங்கி / இரத்த சேமிப்பு வசதி மற்றும் ரேடியோலஜி போன்ற வசதிகள் ஒரே அமைப்பின் கீழ் கிடைக்கும் வசதி. ஐ.சி.யு., எச்.டி.யு., பிரேம், தனிமைப்படுத்தும் அறை, விஷ நீக்க சிகிச்சை அறை ( Stomach wash), அவசர அறுவை சிகிச்சை அரங்குகள், செப்டிக் ஆபரேஷன் தியேட்டர்கள் போன்ற வசதிகளுடன் கூடிய அவசர சிகிச்சைத் துறை நிறுவப்படும்.

**88) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் ( Stem Cell Research Centre) ரூபாய் 2.44 கோடி செலவில் "வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக" (Department of Regenerative Medicine and Research) மேம்படுத்தப்படும்.**

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் ( Stem Cell Research Centre) ரூபாய் 2.44 கோடி செலவில் "வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக" (Department of Regenerative Medicine and Research) மேம்படுத்தப்படும். இத்துறையின் செயல்பாட்டிற்காக 11 புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

**89) 8 புதிய மருத்துவக் கல்லூரிக ளின் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.139.80 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

11 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு கட்டுமான கட்டடங்கள் கட்ட ஏற்கனவே ரூபாய் 3,995.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக அதிக நிதி ஒதுக்கக்கோரிய 8 மருத்துவக் கல்லூரிகளுக்கும் ரூபாய் 139.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**90) அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் வழங்கப்படும் ஒட்டு மொத்த சேவைகளின் தகவல்கள் குறித்த மின்னணு பலகைகள் (Digital Display Boards) அமைக்கப்படும்.**

ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் அங்கு அளிக்கப்படும் அனைத்து மருத்துவ சேவை வசதிகள் குறித்த தகவல்கள் கொண்ட தமிழ் மற்றும் ஆங்கிலத்திலான மின்னணு காட்சிப் பலகைகள் (Digital Display Boards) பொதுமக்கள் பார்வைக்காக நுழைவு வாயில்களில் அமைக்கப்படும்.

**91) தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உறுப்பு மாற்று அங்கீகாரக் குழு அமைக்கப்படும்.**

உறுப்பு தானம் செய்யும் நோயாளிகளுக்கான உறுப்பு மாற்று அங்கீகாரக் குழு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்அமைக்கப்படும்.

**92) சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூபாய் 7.75 கோடி செலவில் மின்தூக்கிகள் புனரமைக்கப்படும்.**

சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மின்தூக்கிகள் மற்றும் மின்சார கருவிகள் ரூபாய் 7.75 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

**93) கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் ஆண்டுக்கு 1000 சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படும்.**

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் புதுப்பொலிவுடன் மீண்டும் செயல்படுத்தப்படும். ஆண்டுக்கு 1000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். இம்முகாம்களில் பொது மருத்துவம், மகளிர் மற்றும் குழந்தை, இதயநோய் மருத்துவம், சிறுநீரக மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், தோல் மருத்துவம், காது மூக்கு தொண்டை, எலும்பு மூட்டு மருத்துவம், மன நல மருத்துவம் ஆகிய 10 துறை சிறப்பு மருத்துவர்களை கொண்டு பொதுமக்களுக்கு பரிசோதனை செய்து, நோயை கண்டறிந்து, தேவைப்படுவோர்க்கு உயர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு உரிய சிகிச்சைகள் அளிக்கப்படும்.

**94) கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி சேவைகள் குறுஞ்செய்திக ளின்வாயிலாக நினைவூட்டும் திட்டம் வலுப்படுத்தப்படும்**

தமிழ்நாட்டில் 100 விழுக்காடு தடுப்பூசி இலக்கினை அடையவும் சுமார் 10 இலட்சம் தாய்மார்களிடையே தடுப்பூசிகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், பிரசவத்திற்கு முன் மற்றும் பிரசவத்திற்கு பின் பராமரிப்பு, 9.23 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் அவர்களுக்குரிய தடுப்பூசிகளை உரிய காலத்தில் செலுத்துவது பற்றிய சுகாதாரச் சேவைகளை நினைவூட்ட மேம்படுத்தப்பட்ட குறுஞ்செய்திகளின்வாயிலாக விழிப்பூட்டல்கள் வழங்குவதற்கு ஆண்டு தோறும் ரூபாய் 22 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

**95) பல்நோக்கு சுகாதார பணியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் என பெயர் மாற்றம் செய்யப்படும்.**

பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் ( Multi Purpose Health Supervisor) மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) ( Multi Purpose Health Worker (Male) ஆகிய பதவிகளின் பெயரினை மாற்றம் செய்ய பல்வேறு சங்கங்கள் விடுத்த கோரிக்கையினை ஏற்று முறையே சுகாதார ஆய்வாளர் நிலை–1 மற்றும் சுகாதாரஆய்வாளர் நிலை–2 என பெயர் மாற்றம் செய்யப்படும்.

**96) கொசுக்களால் பரவும் நோய்த் தடுப்பு திட்ட நடவடிக்கைகள் ரூபாய் 26.86 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.**

டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா, ஜிகா வைரஸ், யானைக்கால் நோய் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் போன்ற கொசுக்களால் பரவும் நோய்களை ஒழிக்க, தேவையான கொசு ஒழிப்பு பணியாளர்கள், உபகரணங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கி கொசு ஒழிப்பு திட்ட நடவடிக்கைகள் ரூபாய் 26.86 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**97) 19 மாவட்டங்களில்அரசு மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக மாற்றி அமைக்கப்படும்.**

13 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாலும், புதிதாக 6 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாலும், இந்த 19 மாவட்டங்களிலும் தலா ஒரு அரசு மருத்துவமனை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்படும்.

**98) செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களுக்கு இணை இயக்குநர் (நலப் பணிகள்) பணியிடங்கள் ரூபாய் 1.11 கோடி செலவில் உருவாக்கப்படும்.**

புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களில் புதிய இணை இயக்குநர் (நலப் பணிகள்) பணியிடங்கள் ரூபாய் 1.11 கோடி செலவில் உருவாக்கப்படும்.

**99) வேலூர் மாவட்டம் காட்பாடியில் 60 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை அமைக்கப்படும்.**

வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுக்காவில், அரசு மருத்துவமனைகள் இல்லாததைக் கருத்தில் கொண்டு, காட்பாடி தாலுக்காவிலுள்ள மக்கள் பயன்பெறும் வகையில் காட்பாடியில் 60 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை அமைக்கப்படும்.

**100) தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறையில் வாகன ஒருங்கிணைப்பு தொகுப்பு திட்டம் (Common Pool of Health Department Vehicles) நடைமுறைப்படுத்தப்படும்.**

சுகாதாரத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட பல்வேறு வாகனங்களின், நிர்ணயிக்கப்பட்ட பயன்பாடு முடிவுற்ற நிலையில், அதனை தேவைப்படும் பிற சுகாதார திட்டங்களுக்கு பயன்படுத்த ஏதுவாக ஒதுக்கீடு செய்ய ஒரு ஒருங்கிணைப்பு தொகுப்பு திட்டம் (Common Pool of Health Department Vehicles) நடைமுறைப்படுத்தப்படும்.

**101) முதியோர் நலனுக்காக சித்தர் நிறைவாழ்வு மையம் ரூபாய் 3.25 கோடி செலவில் 100 சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்படும்**

முதியோர் நல்வாழ்வினை உறுதிசெய்யும் பொருட்டு சித்த மருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை முறையான " **காயகற்ப மருந்துகள்** " ஒற்றடம், நீராவிக் குளியல், தொக்கணம் ( Oil Massage) நசியம், திருமூலர் பிராணாயாமம், சித்தர் யோகம் போன்ற மருத்துவ சிகிச்சைகள், மற்றும் மன நல ஆலோசனைகள் மூலம் உடல்நலம், சமூக நலனுக்கான சிறப்பு சிகிச்சைஅளிக்கும் விதமாக தமி ழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் "முதியோர் நலனுக்கான சித்தர் நிறைவாழ்வு மையம்" ஏற்படுத்தப்படும். இம்மையத்தில் Nursing Therapist ஒருவர் பணியமர்த்தப்பட்டு முதியோர்களுக்கு மேற்கண்ட சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படும். முதற்கட்டமாக ஒரு மையத்திற்கு ரூபாய் 3.25 இலட்சம் வீதம் 100 வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூபாய் 3.25 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

**102) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவில் 'தரவு அலகு'** (Data Cell) **ஏற்படுத்தப்படும்.**

சித்த மருத்துவம் மற்றும் இதர இந்திய மருத்துவமுறைகளான ஆயர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி ஓமியோபதி இவற்றின் ஆய்வுகளை மேம்படுத்தவும், ஆய்வு முடிவுகளை பன்னாட்டு இதழில் வெளியிடும் விதமாக அனைத்து அரசு மருத்துவ நிலையங்களில் அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை நெறிமுறைப்படுத்தும் பொருட்டு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவில் " **தரவு அலகு"** ( Data Cell) ஏற்படுத்தப்படும்.

**103) 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தின் மூலம் இந்தியமுறை மருத்துவ மருந்துகளும் வழங்கப்படும்.**

**"மக்களைத் தேடி மருத்துவம்"** என்ற திட்டத்தின் மூலம் உயர் இரத்த அழுத்தம் ( Hypertension) மதுமேகம் (சர்க்கரை நோய்) உள்ள முதியோருக்கு இந்தியமுறை மருத்துவ மருந்துகளும் வீடு தேடி சென்று வழங்கப்படும்.

**104) 120 இந்திய மருத்துவமுறை மருந்தகங்கள் இந்திய மருத்துவமுறை சுகாதார நலவாழ்வு மையங்களாக ரூபாய் 32 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.**

120 சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாக ரூபாய் 32 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்.

**105) அருகி வரும் நிலையில் உள்ள மருத்துவ தாவரங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் செங்கல்பட்டு–ஆலத்தூர் டாம்ப்கால் நிறுவனத்திற்காக ரூபாய் 70 இலட்சம் செலவில் சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கப்படும்.**

அருகி வரும் நிலையில் உள்ள மருத்துவ தாவரங்களை இனங்கண்டு அவற்றினை பாதுகாக்கும் விதமாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில மூலிகை தாவர வாரியம் மூலம் அழியாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மூலிகை தாவரம் வாரியம் மூலம் விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இருவரையும் இணைக்கும் பாலமாக, பகுதிவாரியாக கூட்டங்கள் நடத்தப்பட்டு அவர்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு, உற்பத்தியாளருக்கும், வியாபாரிகளுக்கும் இணைப்பு பாலமாக செயல்படும்.

செங்கல்பட்டு மாவட்டம் ஆலத்தூர் தொழிற்பேட்டையில் ( Industrial Estate) இயங்கி வரும் டாம்ப்கால் நிறுவனத்திற்கு சொந்தமான தயாரிப்பு தொழிற்சாலைக்கு தேவைப்படும் மின்சார தேவைக்காக ரூபாய் 70 இலட்சம் செலவில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும்.

## 106) டாம்ப்கால் மருந்துகள்அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும்

டாம்ப்கால் நிறுவனம் உற்பத்தி செய்யும் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள் மக்களுக்கு எளிதாக கிடைக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படும்.

**107) இந்தியாவிலேயேமுதன்முறையாகசித்த மருத்துவ பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகாமையில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டின் பழமையான மருத்துவமுறைகளான சித்த மருத்துவத்தை போற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சித்த மருத்துவத்திற்கென தனிப் பல்கலைக்கழகம் (இந்திய மருத்துவமுறைகளான ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் உட்பட) சென்னைக்கு அருகாமையில்ஏற்படுத்தப்படும்.

**108) எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு ஆதரவு பராமரிப்பு மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக ரூபாய் 128.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

2021–22–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு, எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு ஆதரவு பராமரிப்பு மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் மூலம் ரூபாய் 128.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறும்.

**109) முதுகு தண்டு பாதிப்பு மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் ( Bed Sores) சிகிச்சைக்காக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 10 பிரத்யேக படுக்கைகளுடன் தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.**

முதுகு தண்டு பாதிப்பு மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் ( Bed Sores) சிகிச்சைக்காகஅனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 10 பிரத்யேக படுக்கை வசதிகளுடன் கூடிய தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும். இதனால் நீண்ட நாள் படுக்கையிலேயே இருந்து சிகிச்சை பெறும் காலங்களில் ஏற்படும் படுக்கைப் புண்ணிற்கு (Bed Sores) உரியசிகிச்சைஅளிக்கப்படும்.

**110) திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சிப்காட் வளாகத்தில், 125 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆக்ஸிஜன் சேமிப்பு கலன் ரூபாய் 2.25 கோடி செலவில் அமைக்கப்படும்.**

மருத்துவ திரவ ஆக்ஸிஜன் சேமிப்பு திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், திரவ ஆக்ஸிஜனை கூடுதலாக சேமித்து வைக்க திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சிப்காட் வளாகத்தில், 125 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கலன் ரூபாய் 2.25 கோடி செலவில் அமைக்கப்படும்.

**திரு.மா.சுப்பிரமணியன்**
மருத்துவம்மற்றும்மக்கள்
நல்வாழ்வுத்துறைஅமைச்சர்